அ.வ.எண்: 121/2013 நாள்: 15.04.2026

வா.சா.3 – சாத்தன்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால் எனக்கு தற்போது 86 வயதாகிறது, எந்த வருடம் பிறந்தேன் என்று சரியாக நினைவில் இல்லை. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததா என்றால் வரவில்லை. சாட்சியம் அளிக்கும் படி யார் அழைத்தது என்றால் எனது பேரன் அழைத்தார். எனது பேரன் தான் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. தாவா வழக்கை யார் தாக்கல் செய்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் பூக்குளத்தில் உள்ளது. தாவா சொத்து யாருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது என்றால் பனந்தி என்பவருக்கு பாத்தியப்பட்டதாக இருந்தது. நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்கு மூலத்திற்கான விபரங்களை யார் கூறியது என்றால் நான்தான் கூறினேன்.

2. நான் லட்சுமணன் எழுதி வாங்கிய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்தேனா அல்லது அழகர் எழுதிய பத்திரத்தில் சாட்சி கையெழுத்து செய்தேனா என்றால் அழகர் எழுதி வாங்கிய பத்திரத்தில் தான் சாட்சி கையெழுத்து செய்தேன். தாவா சொத்து அழகருக்கு பூர்வீக

பாத்தியப்பட்டதா அல்லது கிரைய பாத்தியப்பட்டதா என்றால் அவர் கிரையம் வாங்கிய சொத்து ஆகும். எனது மகன் எப்பொழுது கிரையம் வாங்கினார் என்றால், சுமார் 10 வருடங்கள் இருக்கும். கருப்பையாவும் எனது மகனா என்றால் கருப்பையா என் மகன் இல்லை. எங்கள் ஊரில் முத்துகருப்பன் மகன் சாத்தையன் என்ற ஒரு நபர் உள்ளார் என்றால் சரிதான். எனது பெயர் சாத்தன் என்றால் சரிதான், என்னை சாத்தையன் என்று எப்பொழுதும் அழைக்க மாட்டார்கள் என்றால் சரிதான், நான் சாத்தன் என்று தான் கையெழுத்து செய்வேன் என்றால் சரிதான்.

3. மேற்படி கிரைய பத்திரத்தின்படி அழகருக்கு எத்தனை சொத்துக்கள் பாத்தியம் என்றால் ஒரு சொத்து தான் பாத்தியம். அழகர் நான் பெற்ற மகனா என்றால், சாட்சி தற்போது மாற்றி அழகர் எனது அண்ணன் மகன் என்று கூறுகிறார். O.S 121/2013 வழக்கை தாக்கல் செய்தது அழகர் மகன் அழகர் என்றால் சரிதான். மேற்படி அழகர் மகன் அழகருக்கு சர்வே எண் 242/1B, 242/1D1 பாத்தியம் என்றால் சரிதான். மேற்படி இரு சர்வே எண்களிலும் அழகர் வீடு கட்டி உள்ளாரா என்றால் இல்லை, ஒரு சர்வே எண்ணில் தான் வீடு கட்டி உள்ளார். தாவா சொத்து அழகருக்கு அனுபவ பாத்தியம் என்று சொன்னால் சரியா தவறா என்றால் அது தவறு. நான் மேற்படி கிரைய பத்திரம் ஆன வா.சாஆ.16 ஆவணத்தில் சாட்சி கையெழுத்து செய்யவில்லை என்றும் எனது பேரன் கேட்டுக் கொண்டதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா வழக்கு பற்றிய விபரங்களும் தாவா சொத்து பற்றிய விபரங்களும்

எனக்கு தெரியாது என்றும், எனது பேரன் அழைத்து வந்து வாதிக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்க கூறியதால் நான் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u>** – இல்லை

PREMI R

Digitally signed by PREMI R
Date: 2026.04.15 15:02:11 +0530